செய்தி வெளியீடு எண்: 495 நாள்: 19.8.2009

# நகர் ஊரமைப்புத் துறையில் புதிய பணியாளர் நியமனங்கள்

நகர் ஊரமைப்புத் துறையானது நகரங்களின் சீரான வளர்ச்சிக்கும் முறையான போக்குவரத்து மற்றும் சாலை மேம்பாடுகளுக்காகவும் பல்வேறு முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள், போக்குவரத்து மேம்பாட்டு திட்டங்கள், புராதன நகர அபிவிருத்தித் திட்டங்கள், மனைப்பிரிவு ஒப்புதல்கள், கட்டுமானங்களுக்கான ஒப்புதல்கள் போன்ற பல்வேறு பணிகளை நிறைவேற்றி வருகிறது.

தற்போது ஏற்பட்டு வரும் அபரிமிதமான வளர்ச்சிகளுக்கு ஈடுசெய்யும் வகையில் மேற்கண்ட திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திட ஏதுவாக இவ்வரசு பொறுப்பேற்ற பின் பல புதிய பணி நியமனங்களையும், பல்வேறு பதவி உயர்வுகளையும் வழங்கி துறையினை மேம்படுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் நகர் ஊரமைப்புத் துறையில் 33 உதவி இயக்குநர்கள் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளது.

தற்போது மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 12 புதிய உதவி இயக்குநர்களுக்கான பணி நியமனங்கள் செய்யப்பட்டு 29.7.09 அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்கண்ட 23 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பதவி | நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வரைவாளர்நிலை3 | 7 |
| 2. | இளநிலை உதவியாளர் | 3 |
| 3. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 4 |
| 4. | தட்டச்சர் | 9 |
| | மொத்தம் | 23 |

இவை தவிர 2007 மற்றும் 2008–ம் ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு பணி நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

**2007–ஆம் ஆண்டு பணியாளர்கள் நிமயனம் செய்யப்பட்ட விபரம்**

| வ. எண். | பதவி | நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அளவர்/உதவி வரைவாளர் | 11 |
| 2. | களப்பணி உதவியாளர் | 8 |
| 3. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 2 |
| 4. | தட்டச்சர் | 7 |
| | மொத்தம் | 28 |

**2008–ஆம் ஆண்டு பணியாளர்கள் நிமயனம் செய்யப்பட்ட விபரம்**

| வ. எண். | பதவி | நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அளவர்/உதவி வரைவாளர் | 30 |
| 2. | களப்பணி உதவியாளர் | 18 |
| 3. | வாகன ஓட்டுநர் | 1 |
| 4. | தொலைபேசி நடத்துனர் | 1 |
| | மொத்தம் | 50 |

**2007–ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்றவர்கள் விபரம்**

| வ. எண். | பதவி | நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 3. | மேற்பார்வையளார்/வநி2 | 4 |
| 4. | கண்காணிப்பாளர் | 4 |
| 5. | மேல்நிலை கணக்கர் | 2 |
| | மொத்தம் | 12 |

2008–ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்றவர்கள் விபரம்

| வ. எண். | பதவி | நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | உதவி இயக்குநர் | 33 |
| 3. | மேற்பார்வையளார்/வநி2 | 5 |
| 4. | கட்டிடக்கலை/திட்ட உதவியாளர் | 12 |
| 5. | வரைவாளர்நிலை–3 | 21 |
| 6. | கண்காணிப்பாளர் | 2 |
| | மொத்தம் | 74 |

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9